# வெள்ள நேரத்தில் செய்ய வேண்டியதும், செய்யக் கூடாததும்

## வெள்ளத்திற்கு முன்பு:

- ✓ வதந்திகளை தவிர்த்து, பதற்றமடையாமல், அமைதியாக இருக்கவும்.
- ✓ அவசர தகவல் பரிமாற்றத்திற்கும், குறுஞ்செய்தி அனுப்ப வசதியாக, செல்பேசியை முழுமையாக சார்ஜ் செய்து வைத்திருக்கவும்.
- ✓ வானிலை குறித்த அண்மை செய்திகளுக்கு வானொலி, தொலைகாட்சி மற்றும் நாளேடுகளை கவனித்து வரவும்.
- ✓ ஆடு, மாடு போனற வளர்ப்பு பிராணிகளை கட்டிப்போடாமல் வைத்திருப்பது அவைகளின் பாதுகாப்புக்கு உதவும்.
- ✓ பாதுகாப்பு மற்றும் அத்தியாவசியமான பொருட்களுடன் கூடிய அவசரகால பையை தயார் நிலையில் வைத்திருக்கவும்.
- ✓ முக்கியமான பொருட்களையும், ஆவணங்களையும் நீர் புகாத பைகளில் பத்திரப்படுத்தி வைக்கவும்.
- ✓ அருகிலுள்ள முகாம்கள்/ உயரமான இடங்களில் உள்ள வீடுகளுக்கு செல்லும் பாதுகாப்பான வழித்தடத்தை அறிந்து வைத்திருக்கவும்.
- ✓ அரசு அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் பாதுகாப்பான இடங்களுக்கு உடனே செல்லவும்.
- ✓ ஒரு வாரத்துக்கு தேவையான, உடனடியாக உண்பதற்கு ஏற்ற உணவுப்பொருட்கள், குடிநீர் முதலியவைகளை இருப்பு வைத்திருக்கவும்.
- ✓ திடீர் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ள, கால்வாய், ஓடை, வடிகால் பகுதிகளை தெறிந்துவைத்திருக்கவும்.

## வெள்ளத்தின் போது :

- ✓ வெள்ள நீருக்குள் செல்லக்கூடாது. அப்படி செல்லவேண்டிய தேவையிருப்பின், தக்க காலணியை அணிந்து செல்லவும்.

- ✓ கழிவு நீர் வடிகால் பகுதிகள், நீர்ச்சந்திகள் முதலியவற்றிலிருந்து விலகியிருக்கவும்.
- ✓ மின் கம்பங்கள், விழுந்து கிடக்கும் மின் கம்பிகள் முதலியவற்றிலிருந்து விலகியிருக்கவும்.
- ✓ திறந்து கிடக்கும் வடிகால்கள், பள்ளங்கள் முதலியவற்றை சிவப்பு கொடி, தடுப்பாண்கள் மூலம் அடையாளமிடவும்.
- ✓ வெள்ள நீரின் மீது நடக்கவோ, வாகனங்களை இயக்கவோ கூடாது. ஏனெனில், இரண்டு அடி ஆழமுள்ள வெள்ள நீரானது பெரிய கார்களைக் கூட எளிதாக அடித்துச்செல்லக்கூடியது.
- ✓ புதியதாக சமைத்த அல்லது உலர்ந்த உணவுகளையே உண்ணவும். உணவுகளை மூடி வைக்கவும்.
- ✓ கொதிக்கவைத்த / குலோரின் கலந்த நீரையே பருகவும்.
- ✓ கிருமிநாசினியை தெளித்து சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்திருக்கவும்.

## வெள்ளம் வடிந்தபின் :

- X வெள்ள நீரிலோ அல்லது அதன் அருகிலோ குழந்தைகளை விளையாட அனுமதிக்காதீர்கள்.
- X பழுதடைந்த மின் சாதனங்களை உபயோகிக்காதீர்கள்.
- X அறிவுருத்தப்பட்டால், முதன்மை மின் விசையை அணைத்து வைக்கவும். மின் சாதனங்களை மின் இணைப்பிலிருந்து எடுத்து விடவும். ஈரமான மின் சாதனங்களை தொடாதீர்கள்.
- ✓ ஏதேனும் மின் கம்பங்கள் முறிந்து கிடக்கிறதா, மின் கம்பிகள் அறுந்து கிடக்கிறதா, வேறு ஏதேனும் கூர்மையான/உடைந்த பொருட்கள் கிடக்கிறதா என கவனியுங்கள்.
- X வெள்ள நீரில் கிடக்கும் உணவு பொருட்களை உண்ணாதீர்கள்.
- ✓ மலேரியாவை தடுக்க கொசுவலையை பயன்படுத்துங்கள்.
- ✓ வெள்ள நேரத்தில் பாம்புகள் தீண்ட நிறைய வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்கவும்.

- x குழாய்களோ, கழிவு நீர் குழாய்களோ சேதமுற்றிருந்தால், கழிவறை மற்றும் குழாய்களை உபயோகிக்காதீர்கள்.
- x சுகாதார அதிகாரிகள் பாதுகாப்பானது என சொல்லும் வரை பொது குழாய்களில் வரும் நீரை பருகாதீர்கள்.

## வெள்ளத்தின் போது வீட்டிலிருந்து வெளியேற நேர்ந்தால் :

- ✓ வீட்டு உபயோக பொருட்கள், மர சாமாங்கள் முதலியவற்றை கட்டில், மேசை போன்ற உயரமான இடங்களில் வைக்கவும்.
- ✓ கழிவு நீர் வீட்டிற்குள் புகுவதை தடுக்க, கழிவறை கோப்பை, நீர் வடிகால் துளைகளில் மண் நிரப்பிய சாக்கு மூட்டைகளை வைக்கவும்.
- ✓ வீட்டின் மின் இணைப்பையும் சமையல் எரிவாயு இணைப்பையும் அணைத்து வைக்கவும்.
- ✓ மேட்டு பகுதிகளுக்கு/ பாதுகாப்பு முகாம்களுக்கு செல்லவும்.
- ✓ அவசரகால பை, முதலுதவி பெட்டி, முக்கியமான பொருட்கள் மற்றும் ஆவணங்களை உடன் எடுத்துச்செல்லவும்.
- ✓ ஆழமான / ஆழம் தெரியாத நீர் பகுதிகளில் இறங்காதீர்கள். நீரின் ஆழத்தை அறிய குச்சியை பயன்படுத்தவும்.
- ✓ அதிகாரிகள் கேட்டுக்கொண்டால் மட்டுமே வீடு திரும்பவும்.
- ✓ குடும்பத்தினருக்கான தகவல் பரிமாற்ற திட்டத்தை உருவாக்கிக்கொள்ளவும்.
- ✓ நனைந்த பொருட்கள் அனைத்தையும் கிருமினாசினி மூலம் சுத்தப்படுத்தவும்.

## வெள்ளத்தின் போது விவசாயத்தின் பொருட்டு செய்ய வேண்டியதும், செய்யக் கூடாததும்

### செய்ய வேண்டியது :

- ✓ கால்நடைகள்/வளர்ப்பு பிராணிகளை அதற்கான தொழுவத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கவும்.
- ✓ கால்நடைகளுக்கு சுத்தமான குடிநீர் கொடுக்கவும்.
- ✓ வெள்ளம் சூழ வாய்ப்புள்ள பகுதிகளில் நீரில் முழ்கினாலும் தாக்குபிடிக்கக்கூடிய பயிர்களை தேர்ந்தெடுக்கவும்.
- ✓ வெள்ளம் வடிந்தபின் வயல்களில் உள்ள உபரி நீரை வடித்து விடவும்.
- ✓ நாற்றுகளும், நெற்பயிருள்ள வயலும் முற்றிலுமாக பாதிக்கப்பட்டிருந்தால், தாமதமான, படிப்படியான விதைப்பு முறைகளை மேற்கொள்ளவும்.
- ✓ மேட்டுநில சூழலில், பருப்பு மற்றும் எள் முதலியவற்றை பயிரிடலாம்.
- ✓ முதிர்ந்த பயிர்களை, கனமழை முன்னறிவிப்பு கிடைத்தவுடன் அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் வைக்கவும்.
- ✓ ஓரளவு பாதிக்கப்பட்ட உழவு நிலையில் உள்ள நெல் வயல்களில், உபரி நீரை வடிகட்டிய பின் 1/3rd $N_2$ + 50% $K_2O$ வை மேலுரமாக இடவும்.
- ✓ பயிர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால், குறுகிய கால ஃபோடொய்ன்சென்சிடிவ் வகைகளை நேரடியாக விதைக்கவும்.
- ✓ வெள்ளத்தால் விதைகள் அடித்துச்செல்லப்பட்டிருந்தால் விதைகளுக்கு மாற்று ஏற்பாடுகளை செய்யவும்.
- ✓ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, வெள்ளம் வடிந்தபின், கூடுதலான நைட்ரஜன் உரங்களை பயன் படுத்தவும்.

## செய்யக்கூடாதவை :

- X அறுவடை செய்த விளைபொருட்களை திறந்தவெளியில் வைத்திருக்க கூடாது.

- x வயலில் நீண்ட நாட்கள் நீர் தேங்க விடக்கூடாது. ஏனெனில் அது பயிர்கள் அழுகவும், நோய் தாக்கதிற்கு உள்ளாக்கவும் செய்யும்.

*****